සුරාබදු කොමසාරිස් ජනරාල්
ஆணையாளர் நாயகம்
Commissioner General
3888022
3888023

අතිරේක සුරාබදු කොමසාරිස් ජනරාල්
(ආදායම් ප්‍රතිපත්ති හා පාලන)
மேலதிக ஆணையாளர் நாயகம்
(வருமானக் கொளகை, நிர்வாகம்))
Additional Commissioner General (Revenue Policy & Admin)
2045050

අතිරේක සුරාබදු කොමසාරිස් ජනරාල්
(ආදායම් මෙහෙයුම් හා නීති ක්‍රියාත්මක කිරීම)
மேலதிக ஆணையாளர் நாயகம்
(வருமான முகமைத்துவம், சட்டவலுப்படுத்தல்)
Additional Commissioner General (Revenue Management&Law Enforcement)
2877891

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
2877890

ඊමේල්-
மின்னஞ்சல்
E-Mail
excisen@slt.lk

දුරකථන අංකය
தொலைபேசி
எண்.
Telephone No
2045000

# ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
# இலங்கை மதுவரித் திணைக்களம்
# EXCISE DEPARTMENT OF SRI LANKA

අංක 353, කෝට්ටෙ පාර .රාජගිරිය .இல.353,கோட்டை வீதி,இராஜகிரிய.No 353, Kotte Road, Rajagiriya.

මගේ අංකය.
எனது இல:
My No.
ED/02/02/23-I

ඔබේ අංකය.
உமது இல:
Your No.

දිනය
திகதி
Date
2020.01.

ம.ஆ/உ.ம.ஆ./மதுவரி அத்தியட்சகர்/
மதுவரிப் பொறுப்பதிகாரி ஊடாக
மதுவரி சார்ஜன் மற்றும் மதுவரிக் காலாளர்கட்கு

**இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி சார்ஜன்/ மதுவரிக் காவலாளர்களின் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல் – 2017 முதலாம் அரைப்பகுதி (2017.06.30 ஆம் திகதிக்கு முன் நியமனம் பெற்ற அலுவலர்களிற்கு மாத்திரம் விண்ணப்பம் கோரப்படுகிறது.)**

மதுவரி சார்ஜன், மதுவரிக் காலாளர்களின் பொருட்டு 2017 முதலாம் அரைப்பகுதியில் நடத்த வேண்டிய வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்தைக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதன் பிரகாரம், இப்பரீட்சைக்கான எழுத்து மூலப் பரீட்சை இலங்கை மன்றக் கல்லூரியினாலும் வாய் மூலப் பரீட்சை மதுவரி ஆணையாளர் நாயகத்தினாலும் நடத்தப்படும்.

(I) மதுவரிக் காவலாளர்களிற்கான முதலாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை :
முதலாம் வினாத்தாள் (எழுத்துமூலம்) - (03 மணித்தியால வினாத்தாள்)
இரண்டாம் வினாத்தாள் (எழுத்துமூலம்)- (03 மணித்தியால வினாத்தாள்)
சீ பரீட்சை (வாய்மூலம்)

(II)மதுவரிக் காவலாளர்/ மதுவரி சார்ஜன்களிற்கான இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை:
முதலாம் வினாத்தாள் (எழுத்துமூலம்) - (03 மணித்தியால வினாத்தாள்)
இரண்டாம் வினாத்தாள் (எழுத்துமூலம்)- (03 மணித்தியால வினாத்தாள்)

மேலே குறிப்பிட்ட பரீட்சைக்கு பின்பற்றப்படும் பரீட்சை விதிமுறைகள் வருமாறு.

03. **பரீட்சை விதிமுறைகள்:**

**3.1** <u>மதுவரிக் காவலாளர்களிற்கான முதலாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை</u>

(அ) முதலாம் வினாத்தாள் – மதுவரிச் சட்டம் :- (03 மணித்தியால வினாத்தாள்)

i. மதுவரிக் கட்டளைச் சட்டம், நஞ்சு, அபின் மற்றும் அபாயகர அவுடதங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றை உள்ளடக்கிய மதுவரிக் கைநூல்

(ஆ) இரண்டாம் வினாத்தாள் - நிர்வாகச் சட்டம் :- (03 மணித்தியால வினாத்தாள்)

i. திணைக்களக் கட்டளைகள் உள்ளடங்கிய மதுவரிக் கைநூல் 1 ஆம் பகுதி
ii. மதுவரிக் காவலாளர் கைநூல்
iii. தாபன விதிக் கோவையின் 1 ஆம் தொகுதியின் V,VI,XII,XIV ஆம் அதிகாரங்கள்
iv. அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவை
v. நிதி ஒழுங்குவிதியின் 104, 165 - 170, 175 - 178, 182 - 184, 200 - 205, 315, 320, 340

(இ) சீ பரீட்சை (வாய்மூலம்):-

சிங்கள/தமிழ் கதைக்கும், புரிந்து கொள்ளும் ஆற்றலை அளவிடுதலாகும். சித்தி அடைவதற்கு 40% புள்ளிகள் பெறுதல் வேண்டும். எழுத்த மூலப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளிற்கு வாய்மூலப் பரீட்சை மதுவரி ஆணையாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் அலுவலர் குழாத்தினால் நடத்தப்படும்.

| பாடம் | பாட எண். | புள்ளிகள் | நேரம் | சித்தியடைய வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| முதலாம் வினாத்தாள் – மதுவரிச் சட்டம் | 01 | 100 | 03 மணி | 40 |
| இரண்டாம் வினாத்தாள் - நிர்வாகச் சட்டம் | 02 | 100 | 03 மணி | 40 |
| சீ பரீட்சை (வாய்மூலப் பரீட்சை) | 03 | 100 | | 40 |

**3.2** <u>மதுவரிக் காவலாளர்/ மதுவரி சார்ஜன்களிற்கான இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை</u>

(அ) முதலாம் வினாத்தாள் – மதுவரிச் சட்டம் :- (03 மணித்தியால வினாத்தாள்)

மதுவரிக் கட்டளைச் சட்டம், நஞ்சு, அபின் மற்றும் அபாயகர அவுடதங்கள் கட்டளைச் சட்டம், திணைக்களக் கட்டளைகள் மற்றும் மதுவரி அறிவித்தல்கள்

(ஆ) இரண்டாம் வினாத்தாள் - அடிப்படைச் சட்டங்கள் :- (03 மணித்தியால வினாத்தாள்)

சட்டம், குற்றிவியல் தண்டனைச் சட்டக் கோவை, இலங்கை தண்டனைச் சட்டக் கோவை, சாட்சி ஆணைச்சட்டம் சம்பந்தமான திணைக்களக் கட்டளை 378 இல் குறிப்பிட்ட விடயப் பரப்புகள்

| பாடம் | பாட எண் | புள்ளி | நேரம் | சித்தியடைய வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| முதலாம் வினாத்தாள் – மதுவரிச் சட்டம் | 01 | 100 | 03 மணி | 40 |
| இரண்டாம் வினாத்தாள் - அடிப்படைச் சட்டங்கள் | 02 | 100 | 03 மணி | 40 |

**04 . விண்ணப்பப் படிவம் சமர்ப்பித்தல் :-**

இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கேற்ப விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.

அதன் பிரகாரம், தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை உரிய மேற்பார்வை அலுவலரின் ஊடாக 2020.02.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் மதுவரி

ஆணையாளர் நாயகத்திற்கு இலங்கை மதுவரித் திணைக்களம், இல. 353, கோட்டை வீதி, ராஜகிரிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் கையேற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**4.1 பரீட்சைக் கட்டணம் :-**

(அ) முதல் முறையாக முழுப் பரீட்சை அல்லது பகுதிக்கு பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) அதன் பின்னர் ஒவ்வொரு முறைக்கும் முழுப் பரீட்சைக்காக ரூ. 500.00

(இ) ஒரு பாடம் மாத்திரம் தோற்றுவதற்கு ரூ.200.00

**05.** எவரேனும் விண்ணப்பதாரிக்கு தேவையான தகைமை இன்றி பரீட்சைக்கு தோற்றியிருப்பின் அவரது பெறுபேறுகள் செல்லுபடியானதாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**06.** தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை எண், பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் என்பன விண்ணப்பத்தில் குறிப்பிட்ட அலுவலக முகவரியின் பிரகாரம் அறிவிக்கப்படும். அதற்கு முன் முகவரியில் மாற்றம் ஏற்படின் தாமதமின்றி அது பற்றி எனக்கு அறியத்தரவும்.

**ஏ. போதரகம**
மதுவரி ஆணையாளர் நாயகம்

பிரதிகள்:-1. பிரதான கணக்காளர்

2. சகல உதவி மதுவரி ஆணையாளர்கள்/மதுவரி அத்தியட்சகர்கள் :-

(விண்ணப்பதாரியினால் பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட பணத்திற்கு பொது 172 பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணத்தை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையின் 0007041628 இலக்கமுடைய மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு உரிய விபரத்தை 2020.02.03 ஆம் திகதிக்கு முன் பிரதான கணக்காளரிற்கு அறிக்கையிடல் வேண்டும். )